**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொன்னேரி.</u>**

**<u>அ.வ.எண். 44/1998</u>**

இந்நீதிமன்றத்து கிரேடு – 3 பென்ஞ்ச் கிளார்க் திரு. இராஜா முகம்மது அவர்களால் சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சி வாக்குமூலம் 1873–ஆம் ஆண்டு 10–வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று **2025 – ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 27** – ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| **தேதி** | **27.11.2025** |
| **பெயர்** | **லலித் ஜி ஜெயின்** |
| **த/பெ** | **கேவர்ஜந்த்** |
| **சாட்சி** | **PW2** |

**விசாரணை தொடங்கும் நேரம்– 12.11.p.m**

**<u>2 மற்றும் 4 முதல் 7 ம் பிரதிவாதிகள் தர்ப்பில் குறுக்கு விசாரணை –</u>**

1. இவ்வழக்கை என் தந்தை தான் முதலில் தாக்கல் செய்தார் என்றால் சரிதான். இவ்வழக்கு நிலுவையில் இருந்த போதே என் தந்தை இறந்துவிட்ட காரணத்தினால் இவ்வழக்கில் நானும் பிற வாதிகளும் தரப்பினர்களாக சேர்க்கப்பட்டோம் என்றால் சரிதான். என் தாயார் என்னுடன் தான் இருக்கிறார் அவருக்கு வயது 76. நாங்கள் இவ்வழக்கில் சேர்க்கப்பட்ட பிறகு பிரதிவாதிகள் தாக்கல் செய்த பதிலுரைக்கு மீண்டும் எந்த ஒரு எதிர் பதிலுரையும் வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

2. என் தந்தைக்கு பணம் கொடுக்கல் வாங்கல் மற்றும் அடகு தான் தொழில் அதை சென்னை திருவல்லிக்கேனியில் தான் செய்து வந்தார் என்றால் சரிதான். நான் பிறந்த வருடம் 1970. இவ்வழக்கை தொடுத்தபோது எனக்கு என்ன வயது என்றால் 27. அதனால் இவ்ழக்கை எதற்காக என் தந்தை தாக்கல் செய்த விவரம் எனக்கு தெரியும் என்றால் தெரியும். இவவழக்கு தொடர்பாக 1ம் பிரதிவாதி 1987 ல் என் தந்தைக்கு அனுப்பிய அறிவிப்பும் அதற்கு என் தந்தை 1997 ல் பதில் அறிவிப்பு அனுப்பியதும் இவ்வழக்கில் ஆவணங்களாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

3. என் தந்தை செய்த தொழிலுக்கு நான் உதவியாக இருந்தேனா என்றால் ஆம். நான் என்ன படித்துள்ளேன் என்றால் பி.காம். பொதுவாக அடகு வியாபரம் செய்பவர்கள் அவர்களுக்குள்ளேயே பணம் கொடுக்கல் வாங்கல் போன்ற உதவியை செய்து கொள்வார்கள் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி மீஞ்சூரில் தான் வசித்து வந்தார் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி என் தந்தையிடம் நகையை வைத்து பணம் பெறுவார் என்றால் சரிதான். இதை தவிர அவர்களுக்கு வேறு பணம் கொடுக்கல் வாங்கல் இருந்தது என்றால் சரியல்ல.

4. 1ம் பிரதிவாதி மகாபலிபுரத்தில் அடகு கடை வைத்துள்ளார் என்றால் சரிதான். வியாபார சிக்கல் காரணமாக அவர் கைது செய்யப்பட்டார் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி வழக்கு சொத்தை மீஞ்சூரில் 1962 வருடமே வாங்கி வைத்திருந்தார் என்றால் சரிதான்.

**(மேலும் குறுக்கு விசாரணை செய்ய வேண்டுகோளுக்கு இணங்க ஒத்திவைக்கப்படுகிறது).**
**விசாரணை முடியும் நேரம். 12.23.p.m.**